முருகப்பெருமான் துணை

**மகான் ஏனாதிநாத நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**19.04.2021**, திங்கட்கிழமை

1. வானவர் போற்றும் வள்ளலே
வையகம் தரும லோகம் ஆக
தானதரும சக்தி பெருக்கி
தவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ தகர் திங்கள்
இருமூன்று திகதி சோம வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 6ம் நாள், 19.04.2021 திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை ஏனாதிநாத நாயனாரும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசி வென்ற ஞானிகள் படை
வரம்தந்து பிரணவக் குடிலில் அருள
4. அருளுகின்ற துறையூர் மண்ணை
அகிலத்தார் தொட்டு வணங்கிட
மிரளுகின்ற துன்பகதி ஓடி
மீட்பாக ஞானிகளின் பாதுகாப்பு கூடும்
5. கூடவே தயவு சிந்தை இல்லா
குறிக்கோளை அடைய இயலா
ஈடேற அரங்கன் திருவடி
இணையிலா ஞானத்திருவடி
6. திருவடி பற்றி வருவதுடன்
தீட்சை அடைந்து சைவநெறி
குருவே என பணிந்து ஏற்று
குவலயத்தார் தொடர்ந்து வர
7. வருவதுடன் தரும வழியை
வழிமொழிந்து உலகமெங்கும்
தருமத்தை செய்து வர
தயவெனும் வெற்றிதரும் சக்தி
8. சக்திநிலை நிரம்பி உலகோர்
சர்வ பலமும் அடைவர்
பக்தியோடு ஞான சித்திகளை
பழுதில்லா பணிவின் வழி அடைந்து
9. அடைந்து தேறுவர் மாறுவர்
அழியாமை கண்டு உயர்வர்
சோடை இல்லா வளமும்
சுபிட்சமும் பாதுகாப்பும் கிட்டி

10. கிட்டியே அரங்க ஞானி வழி
குருபரன் காட்சி சித்தியாக
கிட்டியே உலக மக்கள்
குறைவிலா பெரும் பேறுகாண்பர்

11. காண்கவே அற்புதம் தரும்
கந்தன் அவதார அரங்கன்
ஆன்மீக ஞானவழிவர சிறப்பர்
அறிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—